**செய்தி வெளியீடு எண்: 842** **நாள்:06.11.2020**

## கொள்கை மறுஆய்வு கூட்டம் – ‘‘கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பதற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம்’’

திரு. சி. பொன்னையன், மாண்புமிகு துணைத் தலைவர், மாநில வளர்ச்சி கொள்கைக் குழு அவர்களின் தலைமையில், 06.11.2020 அன்று ‘‘கருவுறுதலுக்கு முன் பிறப்பதற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம்’’ (PC& PNDT Act ) குறித்த கொள்கை மறுஆய்வு கூட்டம் நடைபெற்றது.

மாநில வளர்ச்சிக் கொள்கைக்குழுவின், உறுப்பினர் செயலர் (முழுக் கூடுதல் பொறுப்பு) முனைவர். அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் இக்கூட்டத்தின் நோக்கத்தினை விளக்கி அறிமுக உரையாற்றினார். இக்கூட்டத்தில் இச்சட்டத்தை செயல்படுத்தும் துறைச்சார்ந்த அலுவலர்கள் மற்றும் நிபுணர்கள் கலந்துக்கொண்டு ஆலோசனை வழங்கினர்.

கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பதற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம், 1994–ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, தமிழக அரசால் 1996 முதல் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டம், கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பதற்கு முந்தைய பாலின தேர்வை தடை செய்வதோடு, மரபணு ஒழுங்கீனம், வளர்சிதை ஒழுங்கின்மை, இனக்கீற்று ஒழுங்கீனம், சில பிறவிக் குறைபாடு அமைப்பு மற்றும் பாலினம் தொடர்பான ஒழுங்கின்மைகளை கண்டறிவதற்காக, கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகளை ஒழுங்குமுறைப்படுத்தி, பெண் சிசு கருச்சிதைவுக்கு வழிவகுக்கும் கருவின் பாலினம் அறியும் தொழில்நுட்பங்களை, முறைகேடாக பயன்படுத்தப்படுவதை தடுக்கிறது.

தமிழகம் மற்றும் தேசிய அளவில் பொது மற்றும் சிறார் பாலின விகிதம் தொடர்ந்து குறைந்து வந்துள்ளது, பொது கணக்கெடுப்பு 2001 மற்றும் 2011 க்கான இடைப்பட்ட காலத்தில் பொது மற்றும் சிறார் பாலின விகிதங்களில் தமிழகம் முன்னேற்றம் கண்டுள்ளது. எனினும், மாவட்டங்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளால், மாநிலம் நேர்மறையான பாலின விகிதத்தினை எய்திட வேண்டியுள்ளது. 2001–ம் ஆண்டில் தர்மபுரி, சேலம், நாமக்கல், தேனி மாவட்டங்களில் பெண் சிசுக்கொலை மற்றும் கருக்கலைப்பு காரணமாக குறைந்த சிறார் பாலின விகிதம் இருந்தது. 2011–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுடன் கிருஷ்ணகிரி, ஈரோடு, கரூர், திண்டுக்கல், கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களிலும் சிறார் பாலின விகிதம் குறைவாக காணப்படுகிறது. கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் சிறார் பாலின விகிதம் 900க்கும் குறைவாக உள்ளது. குறைந்த பாலின விகிதம் என்பது பாலின பாகுபாடு சிக்கல் மட்டுமல்லாது மக்கட் சமூக சமநிலையையும் பாதிக்கின்ற ஒன்றாகவுள்ளது.

கருவிலுள்ள பெண் சிசுக்கொலையை தடுப்பதற்கான வழிவகைகள் பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. டாக்டர். எஸ். குருநாதன், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை இயக்குநர் அவர்கள் தமிழ்நாட்டில் இச்சட்டத்தின் செயல்பாடுகள் பற்றி விளக்கினார். கள நிபுணர்களும், இச்சட்டம் குறித்த தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

மாண்புமிகு துணைத்தலைவர், மாநில வளர்ச்சி கொள்கைக் குழு தமது உரையில், நமது மாநிலம் இச்சட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வந்தாலும், சமூகத்தில் நிலவும் பிற்போக்கான சில பண்பாடு சமூக பழக்கங்கள் சிறார் பாலின விகிதத்தினை உயர்த்த தடையாக உள்ளன எனக் குறிப்பிட்டார். வாரிசுரிமை சட்டங்களை தீவிரமாக செயல்படுத்துதல், பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் பொருளாதார ரீதியாக அதிகாரமளித்தல் மற்றும் சம ஊதியம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். அங்கீகரிக்கப்படாத மீயொலி சோதனை மையங்களுக்கு (scan centres) எதிராக தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், இம்மையங்களை முறைப்படுத்துவதற்கான நெறிமுறைகளை வரையறுக்கவும் அறிவுறுத்தினார். தமிழகம் குழந்தைகளை காக்கும் உரிய விழிப்புணர்வு திட்டங்களையும், குறிப்பாக பெண் குழந்தைகளின் பாதுகாப்புக்கான முன்னோடி திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. மேலும் அவர், ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தினை பெண்மையின் உரிமையாக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அவர்கள், இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துதலில் பிற நாடுகள் மற்றும் மாநிலங்களில் கடைப்பிடிக்கப்படும் சிறந்த செயல்பாடுகளை தமிழகத்திலும் பின்பற்றிட உரிய துறைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் ஓய்வு பெற்ற சுகாதாரத்துறை அலுவலர்கள் ஆகியோரின் நிபுணத்துவம் மற்றும் ஒத்துழைப்பை பெறுவதற்கான கூட்டாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் இச்சட்டத்தினை மேலும் சிறப்பாக செயல்படுத்திட பரிந்துரைகள் வழங்கப்பட்டது. இப்பரிந்துரைகள் உரிய நடவடிக்கைக்காக அரசிற்கு அனுப்பி வைக்கப்படும்.

**உறுப்பினர் செயலர் (முழுக் கூடுதல் பொறுப்பு)**
**மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**